A

**மூன்றாம் பருவத்தேர்வு – 2024**

வகுப்பு : 7

**தொகுத்தறி மதிப்பீடு – சமூக அறிவியல்**

**காலம் : 2 மணி** **மதிப்பெண்கள் : 60**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. சீக்கியர்கள் தங்களின் முதல் குரு என யாரைக் கருதுகின்றனர்?
   அ. லேனா ஆ. குரு அமீர் சிங் இ. குருநானக் ஈ. குரு கோபிந்த் சிங்
2. தலையணைப்பகுதி செதுக்கப்படாமல் உள்ள கற்படுக்கைகளை எங்கு காணலாம்?
   அ. வேலூர் ஆ. காஞ்சிபுரம் இ. சித்தன்னவாசல் ஈ. மதுரை
3. உலகின் மிக உயரமான சிகரம் எது?
   அ. அகான்காகுவா ஆ. எவரெஸ்ட் சிகரம்
   இ. கிளிமஞ்சாரோ ஈ.மெக்கென்லீ சிகரம்
4. நிலவரைபடம் உருவாக்குதலின் அறிவியல் பிரிவு _________என அழைக்கப்படுகிறது.
   அ. புவியியல் ஆ. கார்டோகிராஃபி இ. பிஸியோகிராபி ஈ. பௌதீக புவியியல்
5. வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவு தொகை செலவழிக்கப்படுவது _________ என அழைக்கப்படும்.
   அ. சமத்துவ விதி ஆ. உறுதிப்பாட்டு விதி இ. சிக்கன விதி ஈ. வசதி விதி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக** 5 x 1 = 5

6. பல்லவ அரசர் மகேந்திரவர்மனால் முதன் முதலில் கட்டப்பட்ட குடைவரை கோவில் _________என்ற இடத்தில் உள்ளது.
7. பௌத்தம் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சமயம் என _________ எடுத்துரைக்கின்றது.
8. _________ ற்கு உலகின்" காப்பி பானை" என்ற பெயரும் உண்டு.
9. இந்தியாவில் பெண்கள் கல்வியை செயல் வடிவாக்கிய ஜோதிராவ் புலே நினைவில் வைக்கப்படுகிறார். அவர் தனது மனைவியுடன் _________1848 இல் சிறுமிகளுக்கான முதல் பள்ளியைத் தொடங்கினார்.
10. இந்திய அரசாங்கம், ஒவ்வொரு வருடமும் _________ மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வாரத்தை அனுசரிக்கிறது.

**III. பொருத்துக:** 5 x 1 = 5

11. கிரந்தவளி – மதுரை
12. புது மண்டபம் – உலகின் நுரையீரல்
13. அமேசான் காடுகள் – கபீர்
14 புவி அதிர்ச்சி – இலங்கை
15 சிரிமாவோ பண்டாரநாயக – பிளவு

**IV. சரியா? தவறா?** 6 x 1 = 6

16. அடிப்படை தமிழ் சைவப் புனித நூல்கள் 12 ஆகும்.
17. இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார்.

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

18. சமண நிறுவனங்களில் சமூக, சமய வேறுபாடுகளின்றி அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்பட்டது.
19. உலகின் மிக நீண்ட மலைத்தொடர் ஆண்டிஸ்.
20. தீ என்பது ஒரு பேரிடர்.
21. உலகத்திலேயே அதிகமான சாலை விபத்துகள் இந்தியாவில் தான் ஏற்படுகின்றன.

**V. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x 2 = 14**

22. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்? அவர்களில் முக்கியமானோர் யாவர்?
23. தஞ்சை பெரிய கோவிலின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
24. புத்த விகாரங்கள் குறித்து நீவிர் அறிந்ததென்ன?
25. 4 மணி "கடிகார மழை" என்றால் என்ன?
26. தலவரைபடம் – குறித்து நீவிர் அறிந்ததென்ன?
27. பேரிடர் மேலாண்மை சுழற்சியின் ஆறு நிலைகள் யாவை?
28. பெண்களின் மேம்பாட்டிற்கான அத்தியாவசிய காரணிகளைப் பட்டியலிடுக.
29. நுகர்வோர் பாதுகாப்பு விவரிக்கவும்.
30. பாதுகாப்பாக வாகனத்தை இயக்குவதற்கு இரண்டு பாதுகாப்பு முறைகளைக் கூறு.
31. சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்றால் என்ன?

**VI.விரிவான விடையளிக்கவும். 3 x 5 = 15**

32. அ) விஜயநகர நாயக்கர் கால கட்டடக் கலையானது பல்லவர் மற்றும் பிற்காலச் சோழர் கட்டடக் கலையிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது என விவாதிக்கவும்.

அல்லது

ஆ) சமணம், பௌத்தம் பற்றி அறிய உதவும் சான்றுகளை வரிசைப்படுத்துக.

33 அ) வட அமெரிக்காவின் காலநிலைப் பற்றி விளக்குக.

அல்லது

ஆ) வேறுபடுத்துக:

i) தூந்திரப்பகுதி மற்றும் டைகா பகுதி

ii) வெள்ளம் மற்றும் சூறாவளி

iii) காரணம் கூறு : நிலவரைபட நூலின் வரைபடங்கள் சிறிய அளவையில் வரையப்படுகின்றன.

34. அ) பள்ளி பாடத்திட்டத்தில் சாலை பாதுகாப்பு கல்வியை இணைத்திடும் தேவை என்ன?

அல்லது

ஆ) மக்கள் நலனுக்கு வரி ஏன் அவசியம்?

**VII. வரைபடங்கள்**

35. **கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5**

1. சென்னை 2. காவிரி ஆறு 3. இமயமலை 4.மதுரை 5.வங்காள விரிகுடா

36. **கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5**

1. பசிபிக் பெருங்கடல் 2. ராக்கி மலைகள் 3.கிரீன்லாந்து 4.பிரேசில் 5. அட்லாண்டிக் பெருங்கடல்

www.Padasalai.Net




www.Padasalai.Net


Scale 1:182,000,000 1cm = 1820 kms
N